**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க.எண். 25 /ஒபக / 2020, நாள் : 15.12.2020**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி(இடைநிலை) – வேலூர் மாவட்டம் – 2020–21ஆம் கல்வியாண்டு– பள்ளிகளில் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு (Secondary) பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்தல் – பள்ளிகளுக்கு நிதி விடுவித்தல் மற்றும் தலைமையாசிரியர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்திட்டம் சென்னை–6 அவர்களின் செயல்முறைகள், ந.க.எண். 539/C6/SS/2020, நாள்.12.11.2020.

-------

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளுக்கிணங்க ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி(இடைநிலை) வாயிலாக, 2020–21ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எவ்வித பயமும் இன்றி பாதுகாப்பு உணர்வுடன் கல்வி கற்கும் சூழலை உருவாக்குவதற்காக "பள்ளிகளில் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு" (Safety & Security at School Level) என்ற தலைப்பில் பள்ளி ஒன்றுக்கு ரூ.500/– வீதம் திட்ட ஏற்பளிப்புக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் உயரிய நோக்கம், உலக அளவில் கோவிட்–19 கிருமியின் காரணமாக நோய்த்தொற்று பரவும் அசாதாரணமான தற்போதைய சூழலில், பள்ளி மாணவர்கள் எவ்வித பயமும் இன்றி பள்ளிக்கு வருவதை உறுதிபடுத்துவதும், தன்சுத்தத்துடனும், பாதுகாப்பு உணர்வுடனும் கல்வி கற்கும் சூழலை பள்ளிகளில் ஏற்படுத்துவதும் ஆகும். எனவே பள்ளி வளாகம் மற்றும் வகுபபறைகளை கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிக்காக, பள்ளி ஒன்றுக்கு ரூ.500/– வீதம் அனைத்து அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டு அதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது.

வழிகாட்டுதல்கள்

**பள்ளிகள் மேற்கொள்ள வேண்டியவை (பள்ளி திறப்பதற்கு முன்)**

1. பள்ளிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டவுடன் தலைமை ஆசிரியர்கள் SMDC உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி பள்ளிகளையும் வகுப்பறைகளையும் மற்றும் மாணவர்களின் கைகளை கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிக்குத் தேவையான கொள்முதல் செய்ய வேண்டிய பொருள்கள் எவை என்பதையும் அதன் அளவினையும் முடிவு செய்து தீர்மானம் இயற்ற வேண்டும்.
2. தீர்மானத்தின் அடிப்படையில் பொருள்களை விதிமுறைகளை பின்பற்றிக் கொள்முதல் செய்து அவற்றை பள்ளி இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

பள்ளிகள் திறந்த பின்

1. பள்ளிகள் திறந்த பிறகு, கோவிட்–19 கிருமியின் காரணமாக நோய்த் தொற்று பரவும் அசாதாரணமான சூழலில், நோய்த் தொற்று பரவாமல் இருக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.
2. கோவிட்–19 குறித்து அரசின் சுகாதாரத்துறை வாயிலாக வழங்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும்.

மேற்காணும் வழிகாட்டுதல்கள் மற்றும் அனைத்து நடைமுறைகளையும் முறையாக பின்பற்றவும் விடுவிக்கப்பட்ட தொகை முறையாக செலவிடப்பட்டுள்ளதை உறுதி செய்து பயன்பாட்டுச் சான்றிதழ் (Utilization Certificate) மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

15-12-20

மாவட்ட திட்ட ஒங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்
வேலூர்–9.

பெறுநர் :

அனைத்து அரசு / நலத்துறை / நகராட்சி / மாநகராட்சி / உயர்
மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் :

1. மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. முதன்மைக்கல்வி அலுவலர்கள்– இராணிப்பேட்டை, திருப்பத்தூர்
3. மாவட்டக்கல்வி அலுவலர்கள்–அரக்கோணம், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர்
4. அலுவலக கோப்பிற்கு.

Scanned with CamScanner